**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், திருவாரூர்**
**(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்)**
**முன்னிலை : திருமதி.Dr.R. லதா, M.A., M.L., Ph.D.,**
**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்**

**2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், சித்திரைதிங்கள்**
**09ஆம் நாள்**

**மோ.வா.வி.இ.கோ.மனு எண்.107/2023**
**CNR. No.TNTV02-005912– 2024**

1) சுவாமிநாதன், வயது.57,
த/பெ.சுப்பிரமணியன்,
1 7பி, காந்திரோடு,
சீனிவாச நகர்,
திருவாணைகோவில்,
திருச்சிராப்பள்ளி.

2) செந்தில்குமார், வயது.49,
த/பெ.சுப்பிரமணியன்,
க/எண்.14வரதர்
சன்னதிதெரு,
வலங்கைமான்
&டிமுஇலாக்கா,
வலங்கைமான் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

3) லலிதா, வயது.58,
க/பெ.குமரவேலு,
த/பெ.சுப்பிரமணியன்,
எண்.2/2 சரஸ்வதி சதுக்கம்,
பெரம்பூர்,
சென்னை.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:50:39 +0530

4) பத்மினி, வயது.52
க/பெ.சண்முகவேலு,
க/எண்.13/5எ வரதர்
சன்னதிதெரு,
வலங்கைமான் நகரம்,
வலங்கைமான் டிமுஇலாக்கா,
வலங்கைமான் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

**. . . மனுதாரர்கள்**

// எதிர்//

1) நடராஜன், வயது.55,
த/பெ.சுப்பிரமணியன்,
14/30 வரதர் சன்னதிதெரு,
வலங்கைமான் நகரம்,
வலங்கைமான் டிமுஇலாக்கா,
வலங்கைமான் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

2) கிளை மேலாளர்,
தி ஓரியன்டல் இன்சூரன்ஸ்
கம்பெனி லிட்,
க/எண்.1858 கிருஷ்ணாபுரம்,
தெற்குதெரு,
தஞ்சாவூர் தாலுக்கா.
தஞ்சாவூர் டிமு இலாக்கா,
தஞ்சாவூர் மாவட்டம்.

. . . **எதிர்மனுதாரர்கள்**

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:50:45 +0530

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Tr.CMP.No.264 முதல் 281/2020 மனுக்களில்11/05/2020 தேதியில் பிறப்பித்த தீர்ப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பிறப்பிக்கப்படும் உத்தரவு படிவம்:**

| | | | |
|---|---|---|---|
| (a) | இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி | | 1) சுவாமிநாதன், வயது.57,<br>த/பெ.சுப்பிரமணியன்,<br>1 7பி, காந்திரோடு,<br>சீனிவாச நகர்,<br>திருவாணைகோவில்,<br>திருச்சிராப்பள்ளி.<br><br>2) செந்தில்குமார், வயது.49,<br>த/பெ.சுப்பிரமணியன்,<br>க/எண்.14வரதர்<br>சன்னதிதெரு,<br>வலங்கைமான்<br>&டிமுஇலாக்கா,<br>வலங்கைமான் தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>3) லலிதா, வயது.58,<br>க/பெ.குமரவேலு,<br>த/பெ.சுப்பிரமணியன்,<br>எண்.2/2 சரஸ்வதி சதுக்கம்,<br>பெரம்பூர், சென்னை.<br><br>4) பத்மினி, வயது.52<br>க/பெ.சண்முகவேலு,<br>க/எண்.13/5வரதர்<br>சன்னதிதெரு,<br>வலங்கைமான்<br>டிமுஇலாக்கா,<br>வலங்கைமான் தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம். |

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.04.22 17:50:51 +0530

| | | | |
|---|---|---|---|
| (b) | எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி | | 1) நடராஜன், வயது.55,<br>த/பெ.சுப்பிரமணியன்,<br>14/30 வரதர் சன்னதிதெரு,<br>வலங்கைமான் நகரம்,<br>வலங்கைமான் டிமுஇலாக்கா,<br>வலங்கைமான் தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>2) கிளை மேலாளர், தி ஓரியன்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்,<br>க/எண்.1858 கிருஷ்ணாபுரம்,<br>தெற்குதெரு,<br>தஞ்சாவூர் தாலுக்கா &<br>டிமுஇலாக்கா,<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| (c) | இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி | – | 14.03.2022 |
| (d) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி | – | **22.04.2026** |
| (e) | பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம் | – | **ரூ.2,00,000/-** |
| (f) | வட்டி விகிதம் | – | 7.5% |
| (g) | எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும் | – | 14.03.2022 |
| (h) | செலவுத்தொகை ஏதாவது இருப்பின் | | 1) மனு/வழக்குரை நீ.ம. — 745.00<br>2) வக்காலத்து — 10.00 |

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.04.22 17:50:56 +0530

<table>
<tr><td></td><td></td><td></td><td><table><tr><td>3)</td><td>படி மெமோ</td><td>09.00</td></tr><tr><td>4)</td><td>வழக்கறிஞர் கட்டணம்</td><td>7000.00</td></tr><tr><td>5)</td><td>மொத்தம்</td><td>7764.00</td></tr></table></td></tr>
<tr><td>(i)</td><td>உத்தரவின்படி இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம்</td><td></td><td>இழப்பீட்டு தொகை ரூ.2,00,000/- ஐ 2ஆம் எதிர்மனுதாரர் வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் வைப்பீடு செய்ய வேண்டும்.</td></tr>
<tr><td>j)</td><td>மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையாளருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம்</td><td>-</td><td>1 முதல் 4 மனுதாரர்கள் தலா ரூ.25,000/- பெற்றுக்கொள்ள வேண்டியது.</td></tr>
<tr><td>(k)</td><td>இழப்பீட்டு தொகை எதன் மூலமாக எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம்</td><td></td><td>தீர்ப்பாணை தொகையை ரூ.2,00,000/- ஐ 2ம் எதிர்மனுதாரர் இந்த மனு தாக்கலான தேதியிலிருந்து முழு தொகை வசூலாகும் வரைக்கும் 7.5% வட்டியுடன் (மனு தரப்பினரின் தள்ளுபடி செய்யப்பட்ட காலம் இருப்பின் அதை தவிர்த்து) செலவுத்தொகையுடன் இந்நீதிமன்ற இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் கணக்கு எண்.CJMTVR1092023OIC, IFSC. SBIN0004266 - என்ற வங்கி</td></tr>
</table>

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:51:03 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்கில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |
| (l) | இழப்பீட்டு தொகை கோருரிமையாளர் எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விவரம் | | 1 முதல் 4 மனுதாரர்களுக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை தலா **ரூ.25,000/-மும்** இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளலாம். |
| (m) | எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருரிமையாளருக்கு கிடைக்கத்தக்க தல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின் | - | இல்லை. |
| (n) | இதுவரை செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | - | ரூ.372.50 |
| (o) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம் | - | **ரூ.372.50/-** |
| (p) | திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம் | - | இல்லை. |

இம்மனு கடந்த 14.03.2022ஆம் தேதியன்று திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 23.06.2023அன்று M.C.O.P.No.79/2023 என்ற எண்ணில் திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

LATHA Digitally signed by LATHA
Date: 2026.04.22 17:51:09 +0530

பின்பு இம்மனுவானது உ.வி.மு.ச.பிரிவு 24ன்கீழ் இந்நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு 28.06.2023 அன்று இந்நீதிமன்றத்தால் M.C.O.P.No.109/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர், 10.04.2026 ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.V.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.K.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் இத்தீர்ப்பாயம் வழங்கும்.

**<u>ஆணையுரை</u>**

இம்மனுவானது மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு சட்டப்பிரிவுகள் 144, 166, 163(A)இன் கீழ் மனுதாரர்களின் தாயார் ராஜேஸ்வரி மோட்டார் வாகன விபத்திற்குள்ளாகி இறந்ததற்கு நஷ்ட ஈடாக ரூ.25,00,000/- தொகையையும், அத்தொகை செலுத்தும் வரை 12% ஆண்டு வட்டியும் 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ கொடுக்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2) <u>மனுவின் சுருக்கம்:-</u>

**2.1)** இவ்வழக்கு விபத்தில் இறந்த ராஜேஸ்வரி அவரது கணவர் சுப்பிரமணியன், அவரது மருமகள் புவனேஸ்வரி மற்றும் 1ம்



LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:51:15 +0530

எதிர்மனுதாரருடன் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–68–AD–8748 என்ற எண் கொண்ட டாடா காரில் தனது ஊரிலிருந்து கடந்த 15.09.2021ம் தேதி மாலை புறப்பட்டு நாகை மாவட்டம், திருமருகலில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியர் கோவிலில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டு விட்டு மறுநாள் 16.09.2021ம்தேதி மதியம் 1.30 மணியளவில் திருமருகலிலிருந்து வலங்கைமான் செல்வதற்கு நன்னிலம் – கும்பகோணம் சாலையில் மதியம் 2.30 மணிக்கு வெள்ளமண்டபம் என்ற இடத்தில் வந்தபோது 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்த காரினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து சாலையின் இடதுபக்கம் இருந்த புங்கை மரத்தின் மீது மோதியதில் காரில் பயணித்து வந்த ராஜேஸ்வரிக்கு கொடுங்காயமும், அவரது கணவருக்கு சுப்பிரமணியனுக்கு இடதுகால் முட்டிக்கு கீழ் பலத்த அடிபட்டு எலும்பு முறிந்து கொடுங்காயமும், வலதுகை முட்டியிலும் அடிபட்டு காயமும், உடலெங்கும் அடிபட்டு உள்காயமும், ஏற்பட்டதால் கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 27.09.2021 வரை சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

**2.2)** இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும், கவனக்குறைவுமே முழு காரணம் என்பதால் 1ம் எதிர்மனுதார் மீது குடவாசல் காவல்நிலையத்தில் குற்ற எண்.947/2021, இ.த.ச.பிரிவுகள் 279, 337மற்றும் 304(ஏ)ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது .

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:51:21 +0530

**2.3)** விபத்தில் இறந்த ராஜேஸ்வரி வீட்டுக்குடித்தனம் செய்து வந்ததாகவும், அவர் இறக்காமல் இருந்திருந்தால் 100 வயது வரை உயிருடன் வாழ்ந்து மனுதாரர்களுக்கு ஆதரவாக வாழ்ந்து அவர்களது வாழ்க்கையை செம்மைப்படுத்தியிருப்பார் எனவும், மேற்படி இழப்பானது எந்த வகையிலும் ஈடு செய்யமுடியாத இழப்பு என்பதால் 1 முதல் 4 மனுதாரர்கள் தங்களது தாயாரை இழந்து அவர்மூலம் கிடைத்து வந்த அன்பு, பாசம், அரவணைப்பு, வருமானம் ஆகியவற்றை இழந்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

**2.4)** மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் என்பதாலும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் இருந்து வருவதாலும் மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.25,00,000/- கொடுக்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**

(i) இந்த மனுவானது சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர ஏனையவற்றை மனுதாரர்களே நிரூபிக்கவேண்டும்.

Digitally signed by LATHA
LATHA Date: 2026.04.22 17:51:26 +0530

(ii) விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் காப்பீடு குறித்த விவரங்களையோ அல்லது தனது தகவலுக்கான ஆதாரங்களையோ குறிப்பிடவில்லை. விபத்து நடந்ததாகக் கூறப்படும் நேரத்தில், எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீட்டு நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பதை மனுதாரர் நிரூபிக்க வேண்டும்.

(iii) மேலும், விபத்து நடந்த தேதியில் ஓட்டுநரிடம் முறையான மற்றும் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதையும், விபத்து நடந்த தேதியில் வாகனத்திற்கு ஆர்.சி (R.C.), (F.C.) மற்றும் (Permit) இருந்தது என்பதையும் இந்தஎதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவு அல்லது அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்பதை இந்த எதிர்மனுதாரர் மறுக்கப்படுகிறது. மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மிக அதிகம்.

(iv) TN–68–AD–8748 எண் கொண்ட வாகனம், 16.09.2021 அன்று மதியம் 1.00 மணியளவில் நன்னிலம் – கும்பகோணம் பிரதான சாலையில் ஓட்டுநர் மதுபோதையில் வாகனத்தை அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி, எதிரே வந்த வாகனத்தின் மீது மோதாமல் இருக்க முயன்றபோது அருகில் இருந்த மரத்தில் மோதினார். முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத ஓட்டுநர் வாகனத்தை ஓட்டியதால் விபத்து ஏற்பட்டு, சுப்பிரமணியன் என்பவர் மரணமடைந்தார். இந்த வாகனம் 2–வது எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்படவில்லை. எனவே, மனுதாரருக்கு இழப்பீடு வழங்க 2–வது

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:51:33 +0530

எதிர்மனுதாரர் பொறுப்பல்ல. ஆகவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் இந்த எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4)** **<u>மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில்:-</u>**

(1) இவ்விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

(2) மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளார்களா?

(3) மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**5)** மனுதாரர்கள் தரப்பில் **ம.சா.1, ம.சா.2 சாட்சிகள்** விசாரிக்கப்பட்டு, **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.12**வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2**ம் எதிர்மனுதாரர் தரப்பில்** எவ்வித சாட்சிய, சான்றாவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**6)** **<u>பிரச்சினை எண் 1-ற்கான தீர்வு:</u>**

**(1) இவ்விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது? என்ற பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுகையில்,**

(i) இவ்வழக்கு விபத்தில் இறந்த ராஜேஸ்வரி அவரது கணவர் சுப்பிரமணியன், அவரது மருமகள் புவனேஸ்வரி மற்றும் 1ம் எதிர்மனுதாரருடன் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-68-AD-8748 என்ற எண் கொண்ட டாடா காரில் தனது ஊரிலிருந்து கடந்த 15.09.2021ம் தேதி மாலை புறப்பட்டு நாகை மாவட்டம்,

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:51:39 +0530

திருமருகலில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியர் கோவிலில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டு விட்டு மறுநாள் 16.09.2021ம்தேதி மதியம் 1.30 மணியளவில் திருமருகலிலிருந்து வலங்கைமான் செல்வதற்கு நன்னிலம் – கும்பகோணம் சாலையில் மதியம் 2.30 மணிக்கு வெள்ளமண்டபம் என்ற இடத்தில் வந்தபோது 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்த காரினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து சாலையின் இடதுபக்கம் இருந்த புங்கை மரத்தின் மீது மோதியதில் காரில் பயணித்த ராஜேஸ்வரி பலத்த கொடுங்காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்பது ம.சா.ஆ.2 காயச்சான்றிலிருந்து தெரியவருகிறது. அந்தவகையில், மேற்படி காயங்களின் விளைவாகத்தான் இறந்துள்ளார் என்பது ம.சா.ஆ.4 இறப்பு சான்றிதழிலிருந்து தெரியவருகிறது.

(ii) இந்நிலையில், ம.சா.ஆ.12 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் TN–68–AD–8748 என்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் 1ம் எதிர்மனுதாரர் என்பதும், அவரின் கவனக்குறைவே விபத்திற்கு காரணம் என 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

(iii) மேலும், இந்த விபத்தானது TN–68–AD–8748 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் இயந்திரக்கோளாறினால் ஏற்படவில்லை என்பது ம.சா.ஆ.12 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:51:44 +0530

ஆகவே, மனுதாரர்கள் தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியத்தின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் இந்த விபத்திற்கு ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவே இவ்விபத்திற்கு காரணம் என இந்நீதிமன்றம் பிரச்சினை 1ற்கு தீர்வு காண்கிறது.

7) <u>பிரச்சினை எண் 2-ற்கான தீர்வு:</u>

**(2) மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளார்களா?**

(i) மேற்கண்ட பிரச்சினை எண். 1ற்கான தீர்வின் அடிப்படையில் TN-68-AD-8748 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநரும், உரிமையாளருமான 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது என முடிவு செய்யப்பட்டுள்ளநிலையில், விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பது ம.சா.ஆ.9 மூலம் தெரியவருகிறது. மேலும், 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அமலில் இருந்து வந்துள்ளது என்பதும் ம.சா.ஆ.8 காப்பீடு பாலிசி நகல் ஆவணத்திலிருந்து தெரியவருகிறது.

(ii) அந்த வகையில், 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் உரிய முறையில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் அதன் காப்பீட்டுதாரரான 2ம் எதிர்மனுதாரர் பகரபொறுப்பாளி என்ற வகையில் மனுதாரர்களுக்கு இந்நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் இழப்பீட்டு தொகையை 2ம்

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:51:50 +0530

எதிர்மனுதாரரே கொடுக்க கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் பிரச்சினை எண்.2ற்கு தீர்வு காண்கிறது.

**8) <u>பிரச்சினை எண் 3-ற்கான தீர்வு:</u>**

**(3) மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?**

(i) விபத்தில் இறந்த 80 வயதுடைய ராஜேஸ்வரி விபத்தின்போது வீட்டுக்குடித்தனம் செய்து வந்ததாக மனுவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி விபத்தில் இறந்தநபர் எவ்வித வேலையுமின்றி வீட்டுக்குடித்தனம் செய்துவந்துள்ளதால் அவருக்கு வருமான இழப்பு என்பது இல்லை. மேலும், 15.09.2021 தேதியிட்ட விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் 16.09.2021 அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்பதும், அதன் காரணமாக இறந்துபோன நபருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.2 காயச்சான்று மற்றும் ம.சா.ஆ.12 விபத்து பதிவேட்டிலிருந்து தெரியவருகிறது. ஆகவே, இறந்துபோன நபருக்கு ஒட்டுமொத்த இழப்பாக ரூ.2,00,000/- கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

அந்தவகையில், 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு ஒட்டு மொத்த இழப்பீட்டு தொகையாக **ரூ.2,00,000/-ஐ** வழங்க வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் பிரச்சினை எண்.3க்கு தீர்வு காண்கிறது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:51:55 +0530

9) முடிவாக, இந்த மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**1)** மேற்படி இழப்பீட்டு தொகையான **ரூ.2,00,000/- ஐ 2ம் எதிர்மனுதாரர்** இந்த மனு தாக்கலான தேதியிலிருந்து முழு தொகை வசூலாகும் வரைக்கும் 7.5% வட்டியுடன் (மனு தரப்பினரின் தள்ளுபடி செய்யப்பட்ட காலம் இருப்பின் அதை தவிர்த்து) செலவுத்தொகையுடன் இந்நீதிமன்ற இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் **கணக்கு எண்.CJMTVR1092023OIC, IFSC. SBIN0004266 –** என்ற வங்கி கணக்கில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

2) மேற்படி இழப்பீட்டுத் தொகை வைப்பீடு செய்யப்படும்பட்சத்தில், 1 முதல் 4 மனுதாரர்கள் தலா **ரூ.25,000/- ஐ** அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

3) மேலும், மனுதாரர்கள் மீதி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டி இருந்தால் 10 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மேலும், நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த தீர்ப்பாணை தொகையை மனுதாரர்கள் மீதி நீதிமன்ற கட்டணம் செலுத்தும் வரையில் மனுதாரர்கள் பெறத்தக்கவரல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.04.22 17:52:01 +0530

4) மனுதாரர்களின் வழக்கறிஞர் கட்டணம் **ரூ.7,000/-** என நிர்ணயம் செய்யப்படுகிறது.

**(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பான Cholamanadalam MS Genl. Insurane Co.Ltd. Vs. Mr.S.Ayyanar and others TR.CMP No.264 to 281 of 2020 Dt:11.05.2020-இன்படி இந்த தீர்ப்புரையிலேயே தீர்ப்பாணைக்கான அனைத்து விவரங்களும் கொடுக்கப்படுவதால் தனியாக தீர்ப்பாணை தயார் செய்யப்படுவதில்லை.)**

இவ்வுதரவானது சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:52:06 +0530

மோ.வா.வி.கோ.தீர்ப்பாய நீதிபதி,
தலைமை நீதித்துறை நடுவர்
திருவாரூர்.

**I. <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி-</u>**

ம.சா.1 திரு.சுவாமிநாதன்
ம.சா.2 திருமதி.புவனேஸ்வரி

**II. <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 17.09.2021 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.2 | 16.09.2021 தேதியிட்ட காயச்சான்றிதழ நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.3 | 20.09.2021 தேதியிட்ட சட்டப்பிரிவு மாற்று அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.4 | 01.11.2021 தேதியிட்ட 1ம் மனுதாரர் தாயாரின் இறப்பு சான்று நகல் |
| ம.சா.ஆ.5 | 05.01.2022 தேதியிட்ட வாரிசுகள் குறித்த வாரிசு சான்று நகல் |
| ம.சா.ஆ.6 | 29.01.2021 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்குரிய ஆர்சி புத்தகம் நகல் |
| ம.சா.ஆ.7 | 30.01.2021 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீடு பாலிசி நகல் |
| ம.சா.ஆ.8 | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ.9 | 1 முதல் 4 மனுதாரர்களின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.10 | 21.09.2021 தேதியிட்ட வாகன ஆய்வுச்சான்று நகல் |
| ம.சா.ஆ.11 | 1 முதல் 4 மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| ம.சா.ஆ.12 | Accident Register நகல் |

**III. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் –</u>**இல்லை

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.22 17:52:17 +0530

மோ.வா.வி.கோ.தீர்ப்பாய நீதிபதி,
தலைமை நீதித்துறை நடுவர்
திருவாரூர்